**24.08.2022**

**அ.வ.எண். 196/2012**

**வா.சா.1 ரேச்சல் ஜோயல் அவர்களின் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை என் தாயார் கிரையம் வாங்கும் போது நான் அவருடன் செல்லவில்லை. தாவா சொத்தை கிரையம் வாங்கும் போது நான் ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை என்றால் எனது தாயார் இறந்த பிறகு தான் பார்த்தேன். என் தாயார் இறந்த பிறகு தான் எனது சகோதரர் என்னை அழைத்துக்கொண்டு தாவா சொத்தை எனக்கு காண்பித்தார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பார்த்தேனா என்றால் நான் பலமுறை சென்று பார்த்துள்ளேன். தாவா 1ம் இன சொத்து மொத்த விஸ்தீரணமான 6 ஏக்கர் நிலத்தில் தாவா சொத்தான 1 ஏக்கர் 20 செண்டு நிலம் எந்த திசையில் உள்ளது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. தாவா 2ம் இன சொத்து மொத்த விஸ்தீரணமான 39 ஏக்கர் 87 செண்டு நிலத்தில் தாவா சொத்தான 6 ஏக்கர் 60 செண்டு நிலம் வடக்கு பக்கமாக உள்ளது. தாவா 3ம் இன சொத்து மொத்த விஸ்தீரணமான 12 ஏக்கர் 55 செண்டு நிலத்தில் தாவா சொத்தான 2 ஏக்கர் 10 செண்டு நிலம் தெற்கு பக்கமாக உள்ளது. தாவா 3 இன சொத்துக்கள் அனைத்தும் இணைந்து இல்லை, தனி தனியாக தான்

உள்ளது. தாவா சொத்துக்களின் ஐக்குபந்தி குறிப்பிடாததால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ல் தாவா சொத்தின் நான்கு எல்லைகள் குறிப்பிடாததால் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மூலம் எனது தந்தை சர்வே எண் 4/1ஏல் 60 செண்டும், சர்வே எண் 39ல் 3.3 ஏக்கர், சர்வே எண் 40/2ல் 1.05 ஏக்கர் நிலங்கள் மொத்தம் 4.95 ஏக்கர் நிலம் வாங்கினார். அது கிழக்கு திசையில் உள்ளது. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.3, மற்றும் வா.சா.ஆ.4 மூலம் என் தாயார் வாங்கிய நிலம் மேற்கு திசையில் உள்ளது. எனது தாயார் மற்றும் என் தந்தை வாங்கிய நிலங்கள் சர்வே எண் 4/1ஏ மற்றும் சர்வே எண் 40/2 பக்கம் பக்கமாக உள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை ஆவணங்கள் எதிலும் நான்கு எல்லைகளையும், திசைகளையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எந்த திசையில் உள்ளது என்று எனது சகோதரர் சொல்லி தான் எனக்கு தெரியும். மேற்படி சாட்சியத்தை ஆவணங்களின் படி சொல்லாமல் எனது சகோதரர் சொன்னதன் பேரில் தான் சொல்கிறேன் என்றால் எனது சகோதரர் சொல்லி ஆவணம் பார்த்து சொல்கிறேன். எந்த ஆவணத்தை பார்த்து சொல்கிறேன் என்றால் பட்டாவை பார்த்து சொல்கிறேன். எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.14 வரை உள்ள மூல ஆவணங்களிலும் நான்கு

எல்லைகளையும், எந்த திசை என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.14 வரை உள்ள ஆவணங்களை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. அவைகளை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.14 வரை உள்ள ஆவணங்கள் என் அண்ணன் நேருதைரியம் வாங்கினார். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.14 வரை உள்ள ஆவணங்களில் உள்ள விவரங்கள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எனது தாய், தந்தையர் கிரையம் வாங்கும்போது அவர்களது கிரையதாரர் 28 நபர்கள் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா கூட்டுப்பட்டாவாக இருந்தது. அந்த பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யப்பட்டதாக எனது சகோதரர் கூறினார். மேற்படி 28 நபர்களின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாய், தந்தையின் கிரையதாரரான ராமதாஸ், முனுசாமி மற்றும் ராகவன் பெயர்கள் மேற்படி 28 நபர்களின் பெயர்களில் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை உள்ள ஆவணங்களில் தாவா சொத்துக்களின் 18 பங்கில் 1/2 பாகம் தான் கிரையம் வாங்கியதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் படி அத்துபிரியாத 18 பங்கில் 1/2 பாகம் தான் கிரையம் வாங்கி உள்ளார்கள் என்றால்

சரிதான். எனவே 18 நபர்கள் மீது பாகபிரிவினை வழக்கு தான் நான் தாக்கல் செய்யமுடியும் என்றாலும் விளம்புகை பரிகாரம் கோரிய இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களின் பட்டா எண் 19. வா.சா.ஆ.19ல் உள்ள வரி ரசீதுகள் பட்டா எண் 235 மற்றும் 335க்கான வரி ரசீதுகள் என்பதால் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தம் என்று வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு அளித்ததை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர் தாவா சொத்து 18 நபர்களுக்கு சொந்தம் என்று ஆணை பிறப்பித்தார் என்றால் சரிதான். அதனை எதிர்த்து பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணும்படி கூறினார்கள் என்றால் சரிதான். தாவா 2ம் மற்றும் 3ம் இன சொத்துக்கள் 1911ம் ஆண்டின் அ பதிவேடு, 1965ம் ஆண்டின் எஸ்.எல்.ஆர், 1984ம் ஆண்டின் அ பதிவேடு மற்றும் 2002ம் ஆண்டின் கணிணி பட்டா ஆகிய ஆவணங்களில் வெங்கடசப்பா ரெட்டியார் பெயரில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. வெங்கடசப்பா ரெட்டியார் இறந்த பிறகு அவரது வாரிசும் இறந்த

பிறகு வெங்கடசுப்பா ரெட்டியாரின் சகோதரர் ஐயப்ப ரெட்டியார் தாவா சொத்தை அனுபவித்து அவருடைய வாரிசுகளான கிருஷ்ணசாமி, வீராசாமி, பெருமாள் ரெட்டியார் ஆகியோர் 2.1.1961ல் பாகபிரிவினை செய்து அந்த பாகபிரிவினையில் விடுபட்ட சொத்துக்கள் அனைத்தும் பெருமாள் ரெட்டியார் அடைய வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வகையில் பெருமாள் ரெட்டியார் வாரிசுகள் பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து கடந்த 12.8.2011 அன்று பாகம் செய்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்து மட்டும் தான் கிராமத்திலுள்ள 18 நபர்களுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா 2ம் மற்றும் 3ம் இன சொத்துக்கள் வெங்கடசுப்பா ரெட்டியாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்துக்கள் மீது எனது தாய், தந்தையாருக்கும் அவர்களது கிரையதாரருக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும் அதனடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தவறானது என்றாலும் சரியல்ல. செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.